T.C. 036

012/DD/25

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.

(4 × 25 = 100)

1. Translate the following into English.

மக்கள் இன்று எல்லாவற்றையும் எளிதாகப் பெறுவதற்குக் காரணம், அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியே ஆகும். இவ்வாறான வசதிகளை நமக்களிப்பதில் பெரும்பங்கு வகிப்பவை அரசு நிறுவனங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் வங்கிகளும் ஆகும்.

வங்கிப் பணியில் கணினி அறிமுகப்படுத்தப்பட்டபோது, அங்குப் பலருக்கான வேலை வாய்ப்பு பறிபோகும் என்று தொழிற்சங்கங்கள் சார்பில் வாதிடப்பட்டது. இக்கருத்து ஓரளவுக்கு உண்மைதான் என்றாலும் மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப இது போன்ற வசதிகளை இயந்திரமயமாக்கல் இருந்திருந்தால் அதன் விளைவுகள் இன்று எப்படி இருந்திருக்கும் என்பதை கற்பனைகூட செய்து பார்க்க இயலவில்லை.

இன்று கணினி இல்லா வங்கியைக் காண இயலுமா? அதோடு, வங்கிக் கணக்குகள் கணினிமயமானதால் தெருவுக்குத் தெருத் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்களைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வரமுடிந்திருக்கிறது.

கொரோனா காலகட்டத்தில், இணையத்தோடும் தொழில்நுட்பத்தோடும் முழுமையானத் தொடர்புடைய துறைகளும், இணைய வசதி தேவைப்படாத விவசாயத்துறையும் மட்டுமே இயங்கின என்பதை யாரும் மறுக்கப் போவதில்லை. கணினியையும் தொழில்நுட்பத்தையும் தவிர்க்க இயலாத நிலையில் இன்று நாம் இருக்கிறோம்.

மனிதர்கள் அறிவியல் தொழில்நுட்பத்தின் பலனால் தங்கள் வாழ்க்கை வசதிகளையும், சேவைகளையும் எளிதாக்கி வருகின்றனர். ஒருவர் நேரம் மிச்சமாக வேண்டுமானால் அதற்குப் பின்னால் பலரது ஒருங்கிணைந்த அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பு உள்ளது. பலரது தகவல்களையும் சேகரித்தல், அதனைப் பாதுகாப்பாகப் பராமரித்தல் போன்றவையும் இதில் அடங்கும்.

எளிதாகக் கிடைக்கிறதே என்ற எண்ணத்துடன் எந்தச் சேவையையும் கடைசி நேரத்தில் பெறுவதற்கு நாம் முயற்சிக்கக் கூடாது. மாறாகக் குறைந்தபட்ச கால அவகாசம் ஏற்படுத்திக் கொள்ளும் பழக்கத்தை நாம் கைகொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செய்தால் நேரமின்மை காரணமாகக் கடைசி நேரத்தில் பலரும் அனுபவிக்கும் சிக்கல்கள் குறையும். எல்லாவற்றுக்கும், மேலாக, நவீன தொழில்நுட்பத்தால் சேமிக்கப்படும் நேரத்தை உபயோகமாகச் செலவிடும் பழக்கத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

[Turn over

2. Translate the following into English.

மனிதனுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும், ஏன் தாவரங்களுக்கும் கூடத் தண்ணீர் இன்றியமையாதது. தண்ணீரின்றி எந்த உயிரும் வாழ இயலாது. தண்ணீரின் அவசியத்தை உணர்ந்ததால் தான் திருவள்ளுவர், 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறினார்.

மனிதனின் ஆரோக்கியத்திற்கும், உடல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் அடிப்படை ஆதாரமாக இருப்பது சுத்தமான குடிநீர். நாம் அருந்தும் சுத்தமான குடிநீரே உடல் ஆரோக்கியத்தைத் தரும். அதே சமயத்தில், நம் உடலில் ஏற்படும் பல்வேறு வகையான நோய்களுக்கும் நாம் அருந்தும் சுகாதாரமற்ற குடிநீரே காரணமாகவும் அமைந்து விடுகிறது.

மனித உடலுக்குத் தினமும் சராசரியாக 3 லிட்டர் தண்ணீர் அவசியமாகிறது. தட்ப வேப்ப நிலைக்கு ஏற்ப நாம் அருந்தும் தண்ணீரின் அளவும் மாறுபடுகிறது. நம் உடலில் சிறுநீரகம் சீராகச் செயல்பட தண்ணீர் அவசியம்.

நாம் உண்ணும் உணவிலிருந்து சத்துகளை எடுத்து ரத்தத்தில் கலக்கச் செய்தல், ஜீரணிக்கச் செய்தல், திரவக் கழிவுகள், திடக் கழிவுகளை வெளியேற்றல், உடலின் வெப்பநிலையைச் சீராக வைத்திருத்தல், பல்வேறு ரசாயன மாற்றங்கள் ஏற்பட செய்தல் போன்ற நம் உடல் இயக்கம் பலவற்றுக்கும் நாம் அருந்தும் தண்ணீரே காரணமாகிறது.

2018-ஆம் ஆண்டில் நீதி ஆயோக் வெளியிட்ட கூட்டுக் குடிநீர் மேலாண்மை குறியீட்டு அறிக்கை, சுத்தமான குடிநீருக்கான பற்றாக்குறை காரணமாக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்திருந்தது.

பாதாள சாக்கடையிலிருந்து வெளியேறும் கழிவுகள் குடிநீர் குழாயில் கலப்பதாலும், தொழிற்சாலை கழிவுகள், வீடுகளிலிருந்து போடப்படும் குப்பைகள், மாமிசக் கழிவுகள் ஆகியவை ஆறுகள், குளங்களில் கொட்டப்படுவதாலும் தண்ணீரில் மாச அளவு அதிகரித்து வருகிறது.

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ இயற்கை அளித்த கொடைதான் தண்ணீர். தாவரங்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ மிக மிக அவசியமான தண்ணீரை, உரிய முறையில் காய்ச்சி வடிகட்டிய பின்னரே அருந்த வேண்டும்.

நோயற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றால் சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும். தூய குடிநீரின் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சுத்தமான ஆரோக்கியமான வாழ்விற்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவது மாசற்ற குடிநீரே. எனவே, குடிநீரைப் பாதுகாப்போம்; ஆரோக்கிய வாழ்வுக்கு அடித்தளம் அமைப்போம்.

3. Translate the following into English.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, உலக அளவில் மக்கள்தொகையில் முதலிடத்தில் இருக்கும் சீனாவின் மக்கள்தொகை 1.41 கோடி. அதற்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியாவின் மக்கள்தொகை 134 கோடி. ஆனால் 2030-ஆம் ஆண்டு 150 கோடி மக்கள் இந்தியாவில் இருப்பார்கள் என்றும், 2050-ஆம் ஆண்டு வாக்கில் அது 166 கோடியாக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2030-ஆம் ஆண்டிற்குபின், சீனாவில் மக்கள்தொகை மெல்லமெல்லக் குறைந்து, இந்தியா முதலிடத்தில் இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

18-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற பொருளாதார நிபுணரான டி.ஆர். மால்தஸ், ‘அதிகரித்து வரும் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் வருங்காலத்தில் மக்கள் உணவின்றி அவதிப்படுவர்’ என்று கூறினார். அன்று அவரால் வெளியிடப்பட்ட கருத்து, உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள இலங்கை உட்பட, உலகநாடுகள் பலவற்றால் உண்மையென இன்று உணரப்பட்டுள்ளது.

2018-ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை தினம் முதல் முறையாக, ‘குடும்பக் கட்டுப்பாடு மனித உரிமை’ என்கிற முழக்கத்தை வழங்கியதால், இன்று பெண்கள் குறுகிய இடைவெளியில் கர்ப்பமாவதை மறுக்கும் உரிமையைப் பெற்றுள்ளனர்.

மக்கள்தொகைப் பெருக்கத்தினால் உணவு, நீர், சுற்றுச்சூழல் மாசடைதல், சமூக சீர்கேடுகள், குற்றச் செயல்கள் பெருகுதல், சுகாதார பிரச்சனைகள்,வேலையின்மை, போக்குவரத்து நெரிசல், இடப் பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி போன்ற பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

சாமானிய மக்கள் மத்தியில் மக்கள்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் பிரச்சனைகள், குடும்ப நலத் திட்டமிடல், பாதுகாப்பான கருத்தடை முறைகள் ஆகியவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும், ஊடகங்களும் அதற்குத் துணைபுரிந்தால் சிறப்பான பலன் கிட்டும்.

4. Translate the following into English.

1969-ஆம் ஆண்டுக்குப் பிறகு வங்கிகளுக்கு அதிக அளவில் ஊழியர்கள் தேவைப்பட்டபோது, வங்கிகள் பொதுவாகப் பட்டதாரிகளையே தேர்ந்தெடுத்தன. அவர்கள் எந்தத் துறையில் பட்டம் பெற்றனர் என்று கவலைப்படவில்லை. அதனால் பெரும்பாலும் கணக்கு, வேதியியல், இயற்பியல் பட்டதாரிகள் வங்கிப் பணியில் சேர்ந்தனர். பொருளாதாரம், வர்த்தகம் படித்தவர்கள் குறைந்த அளவிலேயே வங்கிகளில் சேர்ந்தனர். வங்கியின் நுழைவுத் தேர்வில் அறிவியல் படித்தவர்கள் தேர்ச்சி பெறுவது அதிக அளவில் இருந்தது.

அவர்கள் வங்கியில் சேர்ந்த பிறகு, வங்கித்துறைக்குத் தேவையான பொருளாதாரம், வர்த்தகம், சட்டம் போன்ற விஷயங்கள் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அவர்கள் ‘சர்டிஃபைட் அஸோஸியேட் ஆஃப் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேங்கர்ஸ்’ (சிஏஐஐபி) தேர்வை எழுத ஊக்குவிக்கப்பட்டார்கள்.

இந்தத் தேர்வை முடித்தவர்களுக்கு மூன்று ஆண்டுக்கு உண்டான சம்பள உயர்வும் வழங்கப்பட்டது. பதவி உயர்வில் இந்தப் படிப்பிற்கு தனியாக மதிப்பெண்களும் வழங்கப்பட்டன. இந்தப் படிப்புகள், வங்கி ஊழியர்கள், துறைசார்ந்த அறிவு பெறவும் நடைமுறை அறிவு பெறவும் பேருதவியாக இருந்தன.

வங்கிகளில் பணிபுரிபவர்களுக்கு பலவிதமான பிரிவுகளிலும் அறிவு தேவை. முக்கியமாக வணிகத்துறை, சட்டத்துறை, தொழில் நுட்பத்துறை போன்றவற்றில் அடிப்படை அறிவு தேவை. இந்தத் துறைகளில் அடிப்படை அறிவு இல்லாதவர்களால் தவறு நேர அதிக வாய்ப்புண்டு, சிறிய தவறுகளால் வங்கிகளுக்குப் பெரிய இழப்பு ஏற்படக்கூடும்.

---